IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.160/2022

Deposition of Witness for P.W.14

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.குமார். |
| FATHER NAME | - | திரு.வெங்கடேசன். |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர், காங்குப்பம். |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.10.2025.

1, 3, 5 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் காங்குப்பம் கிராம நிர்வாக அலுவலராக தற்போது பணிபுரிகிறேன். கீழ்முட்டுகூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது பனமடங்கி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு 11.01.2021 அன்று தகவல் சொன்னார்கள். என்னையும், எனது கிராம நிர்வாக உதவியாளரையும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக இருப்பதற்கு காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். நானும், எனது உதவியாளர் பலராமனும் உடனே பனமடங்கி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு மோகன்ராஜ், சரன்ராஜ், நவீன்ராஜ் என்ற எதிரிகளை போலீசார் கூட்டி வந்தார்கள். ஆஜர் எதிரி மோகன்ராஜ் அங்கு

இருந்தார். மற்ற 2 எதிரிகளுக்கும் கு.வி.மு.ச 317 மனு தாக்கல் செய்துள்ளார்கள். எங்கள் முன்னிலையில் எதிரிகள் 3 பேரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். எதிரி மோகன்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.21. எதிரி சரன்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.22. எதிரி நவீன்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.23. எதிரி மோகன்ராஜ் அவருடைய தாத்தா வீட்டிற்கு பின்னாடி உள்ள மாட்டு பட்டியில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய கடப்பாறையை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.24. என்னிடம் காண்பிக்கப்படும் கடப்பாறை தான் எதிரி மோகன் ராஜ் எடுத்து ஆஜர் செய்தது. அந்த கடப்பாறை சா.பொ.16. போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

எதிரி மோகன்ராஜ் சம்பவ இடத்திற்கு பின்னால் இருந்த மாட்டு கொட்டகையில் இருந்து கடப்பாறையை ஆஜர் செய்தார். அந்த மாட்டு கொட்டகை கூறை வீடா, அல்லது சிமெண்ட் அட்டை போடப்பட்டதா அல்லது ஓட்டு வீடா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. அநத் இடத்திற்கு நானும்,

எனது உதவியாளர் , போலீசார் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர் போனோம். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் 4 கி.மீ. தொலைவில் இருக்கும். மோகன்ராஜ்ஜை நான் அதற்கு முன்பாக பார்த்தது கிடையாது. போலீசார் தான் மோகன்ராஜ் என்று எனக்கு சொன்னார்கள். மோகன்ராஜ்ஜை காவல் நிலையத்திற்கு எங்கிருந்து யார் கூட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாக்குமூலத்தை டைப் செய்தார்கள். நான் சொல்வது போல் மோகன்ராஜ் எவ்வித வாக்குமூலத்தையும் என் முன்பாக கொடுக்கவில்லை என்றும் அதை அவர்கள் எழுதவில்லை என்றும் மோகன்ராஜ் எந்த பொருளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறைமையில் காவல் துறைக்கு கட்டுப்பட்டு அவர்கள் சொன்னது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore